மாலை பதிப்பு

# சுபீட்சம்

20.07.2022 புதன்கிழமை




# புதிய ஜனாதிபதியானார்



# ரணில் விக்கிரமசிங்க

இலங்கை சோசலிச குடியரசின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் இவருக்கு 134 எனும் பெரும்பான்மையான வாக்குகள் கிடைத்துள்ளன.

## 223 வாக்குகள் மொத்தமாக அளிக்கப்பட்டுள்ளன

## 4வாக்குகள் செல்லா வாக்குகளாக அறிவிப்பு

## 219வாக்குகள் செல்லுபடியான வாக்குகள்

## டளஸ் அழகப்பெருமவிற்கு 82 வாக்குகள்

## அநுர குமார திஸாநாயக்கவுக்கு 3 வாக்குகள்


## வாக்களிப்பில் கலந்து கொள்ளாத இரு தமிழ் உறுப்பினர்கள்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சி உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் எம்.பிக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## தேசிய பட்டியல் ஊடாக ஒரு ஆசனத்துடன் நாடாளுமன்றுக்கு வருகைத் தந்த ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதியாக தெரிவு

# பிரிந்து செயற்பட்டது போதும் ஒன்றிணையுங்கள் புதிய ஜனாதிபதி அழைப்பு



இலங்கையில் நிலவரத்தைப் புரிந்துக் கொண்டு, இனியும் பிரிந்து செயற்படாமல் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண முன்வரவேண்டும் என்று இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, நாடாளுமன்றில் அவர் ஆற்றிய விசேட உரையின்போதே இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர், நாடு இன்றுள்ள நிலைமை தொடர்பாக நாம் அனைவரும் நன்றாக அறிவோம். எனவே, என்னுடன் இணைந்து போட்டியிட்ட டளஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திஸ ாநாயக்கவுக்கு நான் இணைந்து பணியாற்ற வருமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன். அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அழைப்பு விடுக்கிறேன். நாம் பிரிந்து செயற்பட்ட காலம் இத்தோடு முடிவுற்றுவிட்டது. நாம் இனிமேல் ஒன்றாக பயணிக்க வேண்டும். நாளை முதல் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்த நாம் தயாராகவே உள்ளோம்- என்றார்.

## எமது வேட்பாளர் தோல்வியடைந்துவிட்டார்



நாம் டலஸை போட்டியிடச் செய்தோம். நாமும் வாக்களித்தோம் ஆனால் தோல்வியடைந்துவிட்டார் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். அதிக வாக்குகள் கிடைத்தமையால் ரணில் விக்கிரமசிங்க வெற்றிப் பெற்றார். எதிர்காலத்தில் என்ன நடக்குமென்று நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என தெரிவித்த அவர், எந்த அரசாங்கம் வந்தாலும் நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றார். இது மக்கள் ஆணை இல்லை என பலரும் கூறினாலும் எம்மை பொறுத்தவரை இதுதான் மக்கள் ஆணை என்றார்

## பண்டாரநாயக்க சிலையை தகர்க்க முயற்சி

காலி முகத்திடலில் ஐுறுசுனு பண்டாரநாயக்க சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து 50 மீற்றர் பகுதிக்குள் எந்தவொரு தரப்பினரும் உட்பிரவேசிப்பதற்கு தடை விதித்து கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த சிலையை சேதப்படுத்தும் திட்டம் இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றிற்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்

## பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும்



### நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்

பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று நான் மீண்டும் கூறுகின்றேன். என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்திருப்பதாவது, “பாராளுமன்றம் இன்னும் பொதுஜன பெரமுனவின் பிடியில் உள்ளது என்பதை நிரூபித்துள்ளது. அது தனது ஆணையை இழந்துவிட்டது. அனுரகுமார திசாநாயக்க நல்ல ஒரு கருத்தை முன்வைத்துள்ளார். அதாவது டளஸ் அழகப்பெருமவுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்தவர்களின் எண்ணிக்கை 113க்கும் அதிகமாகும். அவ்வாறிருக்கு இந்த வெற்றி எப்படி சாத்தியமானது?” என்று பதிவிட்டுள்ளார்.

## புதிய ஜனாதிபதிக்கு சர்வதேச இந்துமத பீடம் வாழ்த்து

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



புதிதாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் இலங்கை நாட்டின் 8ஆவது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு சர்வதேச இந்துமத பீடச்செயலாளர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார் . பொருளாதார நெருக்கடியை மீட்டெடுத்து மக்கள் மன திருப்தியுடன் வாழக்கூடிய சூழ்நிலையை கையாளக்கூடிய தலைவர். இவரது தலைமையில் பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கை மீண்டு நல்ல நிலைக்கு வருவதுடன் சர்வதேச ஆதரவுடன் இலங்கை நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு உங்களிடம் சுமத்தப்பட்டுள்ளது. மக்களை உணர்ந்து மக்களின் மனதை அறிந்து செயற்பட்டு மக்களுக்கு மன நிம்மதியுடன்

02 ஆம் பக்கத்தில்...

## புதிய ஜனாதிபதிக்கு சர்வதேச இந்துமத பீடம் வாழ்த்து

கொடுக்க வேண்டும்.அது இறைவன் உங்களுக்கு தந்த மிகப்பெரிய அங்கீகாரம் ஆகும் என சர்வதேச இந்துமத படத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா அவர்கள் புதிதாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களுடன் கூடிய ஆசி செய்தியினை தெரிவித்துள்ளார்.

# புதிய ஜனாதிபதி நாளை பதவிப்பிரமாணம்

ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பில் வெற்றியீட்டியுள்ள பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாளைய தினம் (21) இலங்கையின் ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார்.

## சர்வதேச நாணய நிதிய நிவாரணத் திட்டம்

நிவாரணத் திட்டம் தொடர்பில் இலங்கையுடனான பேச்சு வார்த்தையை விரைவில் நிறைவு செய்ய முடியும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. தற்போது, நிவாரணப் திட்டம் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் தொழில்நுட்ப கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதாகவும், அந்த கலந்துரையாடல்களின் பெறுபேறுகளின் படி, வேலைத்திட்டத்தை விரைவாக நிறைவு செய்ய முடியும்

## பாதயாத்திரீகளுக்கு குடிநீர் வழங்க நிதியுதவி கோருகிறார் லாகுகலை பிரதேச செயலாளர் நவநீதராஜா



( காரைதீவு நிருபர் சகா)

நாளைமறுதினம் ( 22 ) வெள்ளிக்கிழமை திறக்கப்படும் கதிர்காம காட்டுப்பாதையில் பயணிக்கும் பாதயாத்திரை அடியார்களுக்கு குடிநீர் மருத்துவ வசதி மற்றும் நலன்புரி விடயங்களை கவனிப்பதற்கென நிதியுதவி வழங்குமாறு லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா கோரிக்கை விடுத்துள்ளார். வழமையாக அரசிடமிருந்து கிடைக்கும் நிதியுதவி இம்முறை இதுவரை கிடையாத காரணத்தினால் பொது அமைப்புகள் தனவந்தர்கள் சமுக சேவையாளரகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா காரணமாக காட்டுப்பாதை திறக்கப்படவில்லை

ஆதலால் இம்முறை நாளை 22 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காட்டுப் பாதை திறக்கப்பட இருக்கின்றது .அதன் ஊடாக பல்லாயிரக்கணக்கான பாதயாத்திரை அடியார்கள் பயணம் செய்ய இருக்கின்றார்கள். இவர்களுக்கு வழமையாக அம்பாறை அரசாங்க அதிபரிடமிருந்து கிடைக்கும் நிதியுதவி யினால் குறித்த விடையங்களை லாகுகலை பிரதேச செயலகம் செய்து வந்தது தெரிந்ததே. நாட்டில் நிலவும் சமகால பொருளாதார நெருக்கடி காரணமாக இம்முறை அத்தகைய நிதியை பெற முடியாத சூழல் நிலவுகிறது. எனவே பாதயாத்திரை குழுவினருக்கு இந்த வசதிகளை வழங்குவதற்காக பொது அமைப்புகள் தலைவர்கள் மற்றும் தனவந்தர்கள் உதவுமாறு அன்போடு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பிரதேச செயலாளர் 0777065410 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொண்டு உதவி செய்ய முடியும்.

# புதிய ஜனாதிபதியின் தெரிவு ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி

அசாத் சாலி



நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை பாராளுமன்றம் தெரிந்திருப்பது ஜனநாயகத்துக்கு கிடைத்த பெரும் வெற்றியென தேசிய ஐக்கிய முன்னணி தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார். புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வாழ்த்தி, அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, "முதிர்ந்த அரசியல் அனுபவமுள்ள புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பல பாதைகளை கடந்து வந்தவர். அரசியலில் எத்தனை சவால்களை எதிர்கொள்ள நேர்ந்த போதும், ஒருநாளும் அவர் ஜனநாயகத்தை விட்டுக்கொடுத்ததில்லை. முக்கியமான காலகட்டத்தில் பல தியாகங்கள் செய்து நாட்டையும், மக்களையும் பாதுகாத்த பெருமை அவருக்குண்டு. மட்டுமல்ல நெருக்கடியான நேரங்களில்கூட துணிந்து நின்று பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட அவரது முன்னுதாரணம், அரசியல் முதிர்ச்சியையே காட்டுகிறது. வாதத்திறமையும், வாக்குறுதி மீறாத நேர்மையும்தான் அவரை இந்தளவு உயர்த்தியிருக்கிறது. சர்வதேசத்தில் அவருக்குள்ள செல்வாக்கினால் நமது நாட்டு நெருக்கடிகளை தீர்ப்பதற்கான வியூகங்களை வகுப்பார் என்ற நம்பிக்கை எனக்குமட்டுமல்ல, பாராளுமன்றத்துக்கும் உள்ளது. இந்த நம்பிக்கைதான் அவரை இன்றைய வாக்கெடுப்பில் வெற்றியீட்ட வைத்துள்ளது. எனவே, இனியாவது அரசியல் பேதங்களை மறந்து, நமது நாட்டு நெருக்கடியை தீர்க்க சகலரும் புதிய ஜனாதிபதியுடன் கைகோர்க்க வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# நீண்ட நாட்களின் பின்னர் சாய்ந்தமருதில் கேஸ் விநியோகம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருதில் மிக நீண்ட நாட்களின் பின்னர் பொதுமக்களின் பாவனைக்காக சமையல் எரிவாயு விநியோகம் இன்று (20) புதன்கிழமை சுமூகமாக இடம்பெற்றது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாடும் நாட்டு மக்களும் சிக்கித் தவிர்க்கும் இச் சந்தர்ப்பத்தில், சாய்ந்தமருதில் சமையல் எரிவாயுவைப் பெற முடியாது நீண்ட காலமாக துன்பப்பட்டுக் கொண்டிருந்த பொதுமக்களுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் முறையான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுவாரியாக கிராம அதிகாரிமூலம் வழங்கப்பட்ட அட்டை முறையின் அடிப்படையில் எரிவாயு விநியோகம் இடம்பெற்றது. இந்த முறையின் மூலம் சுமூகமான முறையில் கேஸ் விநியோகம் இடம்பெற்றதனால், இந்த அட்டை முறை வெற்றியளித்தமையும் குறிப்பிடத்தக்கது. சுமார் 800 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நேற்று சாய்ந்தமருதில் இதனூடாக பகிர்ந்தளிக்கப்பட்டதோடு,



12.5 கிலோகிராம் கேஸ் சிலிண்டர் ரூபா 5263 க்கும், 5 கிலோகிராம் ரூபா 2184 க்கும், 2.5 கிலோகிராம் ரூபா 1092 க்கும் விற்பனை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. முந்தநாள் இரவு முதல் சிலிண்டர்களை வரிசையாய் அடுக்கி வைத்து, சமையல் எரிவாயுவைப் பெறுவதற்காக ஆண்களும் பெண்களும் என மிகவும் மும்முரமாகவும் ஆர்வத்துடனும் ஈடுபாடு காட்டியமையைக் காணக்கூடியதாக இருந்தது. அத்தோடு, எரிபொருள் தாகம் ஓரளவு தீர்ந்ததையும், மக்கள் முகத்தில் மகிழ்ச்சியையும் காணக்கூடியதாகவும் இருந்தது.

## ஆரையம்பதி ஐ.ஓ.சியில் குழப்பம் விளைவித்ததாக கருதப்படும் நபரொருவர் சந்தேகத்தின் பேரில் கைது

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஆரையம்பதி - தாழங்குடா லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த (16) திகதி தூர பகுதிகளில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களுக்காக அரச திணைக்கள வாகனங்களில் கலன்கள் கொண்டு வரப்பட்டு பெற்றோல் விநியோகப்பட்டபோது குழப்பத்தை ஏற்படுத்தி, அரச சொத்துக்களிற்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவரை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க குறித்த தினத்தில் அரச உத்தியோகத்தர்களுக்காக குறித்த எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது தவறுதலான புரிதலினால் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்த பொதுமக்கள் குளப்பத்தை ஏற்படுத்தியதுடன், ஒரு சிலரால் அரச சொத்துக்களான சில வாகனங்கள் சேதமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரனையின் போதே குறித்த சம்பவத்தின் போது பொது உடமைக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகத்திற்கிடமான காத்தான்குடியை சேர்ந்த 32 வயதுடைய இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## ஒரு சிலரின் பொறுப்பற்ற நடவடிக்கையால் சகல பணியாளர்களுக்கும் எரிபொருள் வழங்க முடியவில்லை

-வைத்திய அத்தியட்சகர் விளக்கம்-

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சுகாதாரப் பணியாளர்களுக்கான பெற்றோல் விநியோகத்தின் போது நாம் சரியான திட்டமிடலை மேற்கொண்டிருந்த போதிலும் ஒரு சிலரின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக வரிசையில் நின்ற அனைவருக்கும் எம்மால் எரிபொருள் விநியோகிக்க முடியவில்லை என சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி டயாழினி மகேந்திரன் விளக்கமளித்துள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் சாவகச்சேரியில் சுகாதாரப் பணியாளர்களுக்கான பெற்றோல் விநியோகம் எனது கண்காணிப்பு மற்றும் மாகாண சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களது பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. நாம் சரியான திட்டமிடலை மேற்கொண்டு சகல பணியாளர்களுக்கும் எரிபொருள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்பட்டிருந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஒரு சில நபர்களின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக எம்மால் வந்திருந்த முழுமையான சுகாதாரப் பணியாளர்களுக்கும் பெற்றோல் கிடைக்க வழிவகை செய்ய முடியாமல் போனது.சுகாதாரப் பணியாளர்களாக இல்லாத பலர் டோக்கன்(முன்பதிவு) இன்றி குறுக்கு வழியைப் பயன்படுத்தி எரிபொருள் பெற்றதாக விநியோகத்தின் பின்னரே அறிய முடிந்தது. அதனை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு பாதுகாப்புத் தரப்பினருக்கே காணப்பட்டது.நாம் முன்பதிவு இல்லாத எவரையும் பெற்றோல் பெற அனுமதிக்கவில்லை. எனவே நேர் வழியில் வராதவர்களால் தான் சுகாதாரப் பணியாளர்கள் சிலர் எரிபொருள் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.அதனை விட கூடுதலான சுகாதாரப் பணியாளர்கள் சாவகச்சேரிக்கு எரிபொருள் பெற வந்ததையும் அவதானிக்க முடிந்தது.மாவட்டத்தில் மூன்று இடங்களில் சுகாதார பணியாளர்களுக்கு எரிபொருள் விநியோகம் இடம்பெற்ற போதிலும் சாவகச்சேரிக்கே அதிகமானவர்கள் வந்திருந்தனர். இது போன்ற காரணங்களால் தான் 6600லீட்டர் பெற்றோல் கிடைத்தும் திருப்தியடைய முடியவில்லை.என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

## உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைப்பு

(ஹஸ்பர்*)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் விசேட தேவையுடையோர் தங்கியுள்ள நிலையங்களுக்கு தேவையான ஒரு தொகை உலர் உணவுப்பொருட்களை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம நேற்றையதினம் (19) வழங்கி வைத்தார். அரசாங்க அதிபர் அந்தந்த இடங்களுக்கு நேரடியாக சென்று உலர் உணவுகளை வழங்கியதுடன் சிநேகபூர்வமாகவும் கலந்துரையாடினார். 9 அனாதை இல்லங்கள், 3 முதியோர் இல்லங்கள் மற்றும் விசேட தேவையுடையோருக்கான பராமரிப்பு நிலையம் ஆகியவற்றுக்கு இந்த உலர் உணவுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் மற்றும் உரிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## பொருளாதார நெருக்கடியில் முன்னெடுப்புகளை முன்னெடுத்தல் என்பது தொடர்பில் செயலமர்வு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

பொருளாதார நெருக்கடியில் ஊடகவியலாளர்கள், மற்றும் சமய தலைவர்கள் எவ்வாறு தமது முன்னெடுப்புகளை முன்னெடுத்தல், சிறுபான்மை சமூகங்களின் தீர்வு விடயத்தில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு போன்றவை தொடர்பில் செயலமர்வு ஒன்று செவ்வாய்க்கிழமை (19) மட்டக்களப்பு, ஊறனி அமெரிக்க மிசன் மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர். இதன்போது தற்போதைய கால கட்டத்தில் மக்கள் எதிர்கொண்டுள்ள சவால்கள், மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார சிக்கல்கள், உள்ளிட்ட பல விடையங்கள் குறித்து சிரேஸ்ட வளவாளர்களான இருதையநாதன், மற்றும் கே.கணேசமூர்த்தி ஆகியோர் விளக்கமளித்தனர். இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பிலும் அவற்றுக்கு எவ்வாறு தீர்வுகளை முன் வைப்பது தொடர்பிலும் ஊடகவியலாளர்கள், மற்றும் சமயத் தலைவர்களும் கருத்துக்களை முன் வைத்தனர். குறித்த செயலமர்வில் மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் இயக்குணர் அருட்பணி ஏ.யேசுதாசன், சர்வமத ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வீ.கே. சிவபாலன் குருக்கள், சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸ், சர்வமத ஒன்றியத்தின் உபதலைவர் மௌலவி சாஜஹான், அமெரிக்கன் சிலோன் மிசனின் கிழக்கு பிராந்திய குருமுதல்வர் அருட்பணி எம்.லூகேயோன் (லூக்) உள்ளிட்ட சர்வமத ஒன்றியத்தின் உறுப்பினர்களும் கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## காரைதீவில் எரிவாயு விநியோகம்



( காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு பிரதேச த்தில் நீண்ட காலத்திற்கு பிறகு இன்று (20) புதன்கிழமை எரிவாயு விநியோகம் முறைப்படி இடம் பெற்றது. காரைதீவு பிரதேச செயலக த்தின் ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட குடிப்பாளர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் முதல் 40 குடியிர உள்ள ப்பாளராகளுக்கு விபுலானந்த விளையாட்டு மைதானத்தில் வைத்து எரிவாயு சிலிண்டர் வழங்கப்பட்டது. முதல் தடவையாக ஒழுங்கு முறைப்படி இந்த எரிவாயுவினி யோகம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. கிராம சேவையாளர்கள் முன்னிலையில் முறையாக விநியோகிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது .



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

## திருக்கொடியேற்றம்
## 22.07.2022 வெள்ளிக்கிழமை


## தீர்த்தோற்சவம்
## 12.08.2022 வெள்ளிக்கிழமை

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

## 22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்

## 12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்





விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)